11th March 1964]

தைச் சேர்ந்த ஒருவருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது பற்றி ஆலோசிக்கப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது கேள்வி இல்லை. கலெக்டருக்கு இவ்வாறு ரெப்ரசென்டேஷன் செய்தால் கவனம் செலுத்துவார்.

கைத்தறி நிதிக் கார்ப்போரேஷன்

* 212 **கேள்வி.—திரு. பி. கே. மூக்கையா தேவர் :**
திரு. எம். வி. கரிவேங்கடம் : } கனம்
கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அமைக்கப்படவிருக்கும் கைத்தறி நிதிக் கார்ப்போரேஷன் எப்பொழுது பணியாற்றத் துவங்கும்?

(இ) இது குறித்து தென் இந்திய டெக்ஸ்டைல் ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து முறையீடு எதுவும் வரப்பெற்றுள்ளதா?

(உ) அப்படியானுல், அதன் விவரங்கள் யாவை?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) The matter has been taken up with the Government of India. The Handloom Finance Corporation will be set up as soon as a decision is reached. The answer was submitted on 20th January 1964 and this was the position then. Now we have received a communication from the Government of India permitting us to establish the Handloom Finance Corporation.

(b) No.

(c) Does not arise.

திரு. வி. எஸ். எஸ். மணி : இந்த கைத்தறி நிதிக் கார்ப்பரேஷனுக்கு ராஜ்ய அரசாங்கத்தின் உதவி எவ்வளவு? தனியார் துறை உதவி எவ்வளவு? மத்திய அரசாங்கத்தின் உதவி எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு மத்திய அரசாங்கம் உதவி கொடுக்கமாட்டார்கள். ரிசர்வ் பாங்க் கொடுக்கமாட்டார்கள். ராஜ்ய சர்க்கார் பத்து லட்சம் ரூபாய் முதலீடு செய்வதாக முடிவு செய்திருக்கிருர்கள். மற்றச் சங்கங்களில் உள்ளவர்கள் சேர்ந்து 25 லட்சம் ரூபாய் வரை போடுவதாக ஹாண்டுலூம் டைரெக்டரிடம் வாக்குக் கொடுத்திருக்கிருர்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : கைத்தறி நிதிக் கார்ப்பரேஷன் மூலமாக எந்த எந்த வகையில் யார் யாருக்குப் பண உதவி கிடைக்கும், உற்பத்தியாளர்களுக்குக் கிடைக்குமா, தனிப்பட்ட நெசவாளர்களுக்குக் கிடைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதில் மாஸ்டர் வீவர்ஸ் அங்கத்தினராகச் சேரலாம். இண்டிபெண்டெண்ட் வீவர்சும் அங்கத்தினராகச் சேரலாம். அவ்வாறு அங்கத்தினராகச் சேருகிற

[11th March 1964

வர்களுக்குத்தான் பண்டங்களை விற்பனை செய்யக் கடன் உதவி கிடைக்கும். குறிப்பாக அவர்களிடத்தில் துணி தேங்கினால் அந்தத் துணியைக் காப்பரேஷனிடத்தில் கொண்டுபோய் வைத்துக் கார்ப்பரேஷனிடத்தில் கடன் வாங்கலாம். நூல் விநியோகம் முதலியவற்றைக் கூட கார்ப்பரேஷன் மூலமாகச் செய்யலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : உற்பத்தியாளர்களுக்கு பர்சனல் ஷீயூரிடி மூலமாகக் கடன் உதவி அளிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு ஒரு போர்டு இருக்கும். அந்த போர்டு மூலமாகத்தான் இந்தக் கடன் உதவி அளிக்கப்படும்.

Power looms for weavers

* 213 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to supply power looms to the weavers instead of the articles supplied to them under Cess Fund Scheme?

The Hon. Sri R. VENKATARAMAN : No.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, விசைத் தறிகளுக்கு அனுமதி வழங்குவதன் காரணமாக ஆங்காங்குள்ள கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதகம் ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதை அரசாங்கம் அறியுமா ? அந்தத் தொல்லையை நீக்க என்ன நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த ராஜ்யத்தைப் பொறுத்த அளவில், விசைத் தறிகளுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்பதுதான் அவர்களுடைய நோக்கம். அசோக் மேதா கமிட்டி இங்கு வந்தபோது கூட, ராஜ்யத்திலே இருக்கின்ற கைத்தறி நெசவாளர் சங்கங்களும் ராஜ்ய சர்க்கார் பிரதிநிதிகளும் இதைத்தான் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதர ராஜ்யங்களிலே இருக்கிறவர்கள் தங்களுக்கு விசைத் தறிகள் வேண்டுமென்று கேட்கும்போது, அவர்களுக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்று நாம் சொல்ல இயலாத நிலைமையில் இருக்கிறோம். நம்முடைய ராஜ்யத்திற்கு அது தேவை இல்லை என்று வேண்டுமானால் நாம் சொல்ல முடியுமே தவிர, மற்ற ராஜ்யங்களுக்குக் கொடுக்கக்கூடாது என்று சொல்ல இயலாது. மற்ற ராஜ்யங்களுக்கு விசைத் தறி கொடுத்து, நம்முடைய ராஜ்யத்தில் விசைத் தறியை ஏற்றுக்கொள்ளாவிட்டால் மற்ற ராஜ்யங்களிலிருந்து போட்டியை (காம்பெடிஷன்) ஏற்படுத்திவிடும். இது சங்கடமான பிரச்னை. இதை நாம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. வி. எஸ். எஸ். மணி : விசைத் தறியினால் கைத்தறிகள் பாதிக்கப்படும் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?